செய்தி வெளியீடு எண்–55 நாள்–18.1.2008

# செய்தி வெளியீடு

## மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-III விபர தொகுப்பு நூல் வெளியிட்டு, பணி நியமன ஆணைகள் மற்றும் தரச்சான்றிதழ் வழங்கினார்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் குடிநீர் வசதி, மழைநீர் வடிகால் வசதி, உயர்தர பேருந்து நிலையங்கள், பாதாள சாக்கடை வசதி, நவீன இறைச்சிக் கூடங்கள் மற்றும் தகன மேடைகள் போன்ற அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு தேவையான பல்வேறு திட்டங்களை தமிழக அரசு நகராட்சி நிர்வாகத் துறையின் மூலம் செயல்படுத்தி வருகிறது. இப்பணிகளை மேற்கொள்ளும் வகையில் உலக வங்கியின் கடனுதவியுடன் ரூபாய் 1350 கோடி மதிப்பிலான தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்-III செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள மாநில அளவிலான திட்ட அங்கீகாரக் குழு மற்றும் துணைக்குழு ஆகியவற்றின் மூலம் அனுமதிக்கப்பட்டுள்ள பணிகளின் விபரங்கள் அவற்றின் செயலாக்கம் குறித்த தகவல்கள் இத்திட்டம் தொடர்பான அரசாணைகளின் விபரங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய தகவல் தொகுப்பு அடங்கிய நூலை மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (18.1.2008) தலைமைச் செயலகத்தில் வெளியிட்டார். அதனை ஆலந்தூர் நகர்மன்றத் தலைவர் திரு.ஆலந்தூர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் நகராட்சி மன்றத் தலைவர்கள் சார்பாக மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

மேலும் 2007–08ஆம் ஆண்டு நகராட்சி நிர்வாகத் துறை மானியக் கோரிக்கையின் போது ‘‘நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் கட்டுப்பாட்டில் உள்ள மயானங்களில் பணிபுரியும் வெட்டியான் என்றழைக்கப்படும் மயானப் பணியாளர்கள், மயான உதவியாளர்கள் என பெயர் மாற்றம் செய்யப்பட்டு அவர்கள் கால முறை ஊதியம் பெறும் வகையில் ஆணை வெளியிடப்படும்’’ என்று அரசு அறிவித்தது. இதன்படி, சென்னை மாநகராட்சி பகுதியில் உள்ள மயானங்களில் பணியாற்றி வரும் 173 நபர்களும், மதுரை மாநகராட்சி பகுதியில் உள்ள மயானங்களில் பணியாற்றி வரும் 40 நபர்களும், மயான உதவியாளர்கள் என காலமுறை ஊதிய விகிதத்தில் ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ளனர்.

அதே போல், ஆலந்தூர் நகராட்சி பகுதியில் உள்ள மயனாங்களில் பணியாற்றிவரும் 7 நபர்கள் மயான உதவியாளர் பணியிடங்களில் காலமுறை ஊதியத்தில் தற்போது நியமிக்கப்பட்டுள்ளனர். இந்த நியமன ஆணைகளை சம்பந்தப்பட்ட பணியாளர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்று வழங்கினார். தூத்துக்குடி நகராட்சிக்கு சொந்தமான, ரூபாய் ஒரு கோடியே 30 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அறிஞர் அண்ணா திருமண மண்டபம் கடந்த 16.7.2007 அன்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந்த திருமண மண்டபத்தின் நிர்வாக முறைகளை ஆய்வு செய்த மும்பையில் உள்ள பன்னாட்டு தர நிர்ணய சான்றிதழ் ( ISO) வழங்கும் நிறுவனத்தின் அதிகாரிகளால் இந்த மண்டபத்தின் கட்டுமான சிறப்பு, அழகிய வடிவமைப்பு, வாகன வசதி, சுகாதார வசதி, மேம்பட்ட பராமரிப்பு போன்ற பல்வேறு வசதிகள் ஆய்வு செய்யப்பட்டன. இந்த ஆய்வின் அடிப்படையில் இத்திருமண மண்டபத்திற்கு மேற்கண்ட நிறுவனம் ISO/9001-2000 என்ற தரச்சான்றிதழை வழங்கி பெருமைபடுத்தியுள்ளது. இந்த சான்றிதழ் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் தூத்துக்குடி நகர்மன்ற தலைவர் திருமதி. ஆர்.கஸ்தூரி தங்கம் அவர்களிடம் இன்று வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு கால்நடைத்துறை அமைச்சர் திருமதி. கீதா ஜீவன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு செயலர் திரு.க.தீனபந்து, இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகத் ஆணையர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., மற்றும் நகராட்சி நிர்வாகத் துறை உயர் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.